1993 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலே, அங்கேயுள்ள கிராமங்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்று கணக்கு எடுத்து அந்த கிராமப் பகுதிகள் பயன் அடைகிற வகையிலே அங்கே சிறிய மண் ஆய்வு மையங்கள் இருக்கின்றன, விவசாயிகள் தங்களுடைய மண் மாதிரி களை எடுத்து அங்கே தந்து பரிசோதனை செய்து அதனுடைய பரிந்துரையின்படி அவர்கள் இன்றைய தினம் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நடமாடும் மண் ஆய் வகம் வேண்டும் என்று சொன்னால் அந்த மண் ஆய்வகத்திலே அனைத்துச் சத்துக்களையும். அதாவது நுண் ஊட்டச்சத்துக்கள் குறைவை அதனால் கண்டு பிடிக்க இயலாது, ஆய்வகங்கள் மூலமாகவே அனைத்து சத்துக் குறைவையும் கண்டுபிடிக்க முடியும், பரிசீலனை செய்ய முடியும். எனவேதான் இந்த ஆண்டு வருடத்திற்கு 12 ஆயிரம் மண் மாதிரி பரிசோதனை இலக்கை அடைய வேண்டுமென்று இந்த அரசு தீவிர மாகப் பணியாற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 558, திரு. டி. எம். ரங்கராஜன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்,

558—

சென்னையில் தீப்பற்றாத வீடுகள் கட்டுதல்.

*17181—திரு. டி. எம். ரங்கராஜன் :

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா —

சென்னையில் அடிக்கடி குடிசை வீடுகள் தீப்பற்றி எரிவதைத் தடுத்திட தீப்பற்றாத வீடுகளைக் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் : மாண்பமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஆம்' என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவிததுக் கொள்கிறேன். இந்தத் திட்டம் எவ்வளவு லட்சம் ரூபாய் செலவிலே எந்தெந்தப் பகுதிகளிலேயெல்லாம் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது என்பதனை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தைப் பொறுத்தவரை அது ஏற்படுத்தப்பட்ட காலத்திலிருந்து இதுவரை சென்னையிலே சுமார் 53,124 குடியிருப்புகளைக் கட்டியிருக்கிறது. அந்த அளவிலே கடந்த ஆண்டில், 1992—93—ஆம் ஆண்டில் மட்டும் சென்னையிலே இருக்கிற வீடுகள் அடிக்கடி தீப்பற்றி எரிவதைத் தடுக்கின்ற வகையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு 5 ஆயிரம் மாடிக் குடியிருப்புகள் குடிசைவாழ் மக்களுக்காக கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு இருக்கின்றன. அதே போல அரசு நிலங்களிலே இருக்கின்ற குடிசைப் பகுதிகளை மாற்றி அமைப்பதற்காக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட வீடுகளை உருவாக்குவதற்காக கடன்களும் இவ்வாரியத்தின் வாயிலாக வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தின் வாயிலாக 6 ஆண்டுகளிலே சுமார் 35 ஆயிரம் குடும்பங்கள் பயனடைகின்ற வகையிலே சென்னையிலே அரசு ஒரு திட்டத்தை உருவாக்கி இருக்கிறது. அதேபோல ஆட்சேபகரமான பகுதிகளிலே வாழுகின்ற, சென்னை நகரில் நடைபாதைகளில், நதிக்கரை ஓரங்களில் மற்றும் கூவம், அடையாறு போன்ற பகுதிகளிலே இருக்கின்ற சுமார் 53,678 குடும்பங்களை மாற்றி அமைக்கிற வகையில் கடந்த நிதிநிலை மானிய கோரிக்கையில் சுமார் 105 கோடியே 68 லட்ச ரூபாய் திட்ட மதிப்பீட்டில் சென்னை நகருக்கு அருகேயுள்ள பள்ளிக்கரணை என்ற பகுதியில் மேம்படுத்தப்பட்ட மனைகளில் இவர்களைக் குடியமர்த்துவதற்காக அரசிடம் செயற்குறிப்பு இருந்து வருகிறது. அதுவும் இந்த அவையிலே அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக தமிழக அரசினுடைய, நிதியுதவி பெறுகின்ற கோரிக்கை மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. இத்திட்டத்திற்கு நிதியுதவி கிடைக்கப் பெற்றவுடன் திட்டப் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 30]

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. டி. எம். ரங்கராஜன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் விவரமாக இங்கே அறிக்கையைத் தந்தார்கள். எனது மைலாப்பூர் தொகுதியிலே சுமார் 83 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் அடிக்கடி தீ விபத்து நேருகிற பகுதியாக ஐ. ஜி. ஆபீசுக்குப் பின்னால் உள்ள கைலாசபுரத்திலும் அதே போன்று சாந்தோம் பீச்சிலே உள்ள திடீர் நகர் பகுதியிலும் அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிறது. இந்தப் பகுதிகளையெல்லாம் மாற்றி பள்ளிக்கரணையிலே அவர்களுக்கு வேறு குடியிருப்புகள் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதனை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் மைலாப்பூர் தொகுதியில் இருக்கின்ற கைலாசபுரம் மற்றும் திடீர் நகர் பகுதியிலே இருக்கிற குடிசைகளை மாற்றுகின்ற திட்டம் வாரியத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. கூடிய விரைவிலே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் பிற நகர்ப்பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படுமா? ஏனெனில் கோஷ்டிச் சண்டைகள் வருகின்றபொழுதோ அல்லது திடீர் விபத்துக்கள் நேரிடுகின்ற பொழுதோ சம்பந்தமே இல்லாமல் அந்த எல்லாக் குடிசைகளும் எரிந்து விடுகின்றன, அதனால் தொடர்பு இல்லாத ஏழைக் குடிசைகள் எல்லாம் கூடப் பாதிக்கப்படுகிறது, எனவே, நிரந்தரத் தீர்வு காண்பதற்காக இந்தத் திட்டத்தைப் பிற நகர்ப் பகுதிகளுக்கும் அரசு விரிவுபடுத்துமா? ஆஸ்பெஸ்டாஸ் சிங்க் ஷீட் போன்றவைகளைத் தந்து உதவுமா எனக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 30

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிசை மாற்றுப் பணிகள் கடந்த காலக் கட்டத்தில் சென்னை நகரை மட்டுமே மையமாகக் கொண்டு இயங்கி வந்திருக்கிறது, இதய தெய்வம் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பதவி ஏற்ற பிறகு மாவட்டத் தலைநகரங்களிலும் மற்றப் பகுதிகளுக்கும் இது விரிவுப்படுத்தப்பட்டிருக்கிறது, நிதிநிலையைக் கருத்திற்கொண்டு எந்த எந்தப் பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்படும் என்பதை அரசு ஆய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். ஜெயக்குமார்,

திரு, எஸ், ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் அரசாங்க இடத்திலே இருக்கின்ற குடிசைகளை எல்லாம் அகற்றி வேறு இடம் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள், இந்த பிரைவேட் இடத்தில் எல்லாம் 30 வருஷம், 40 வருஷங்களாகக் குடிசைகள் போட்டிருக்கிறார்கள், அங்கேயும் தீப்பிடிக்கிறது, அம்மாதிரி இடங்களையெல்லாம் நீங்கள் ஹியுமானிடேரியன் கன்சிடரேஷன் செய்து அவர்களுக்கும் வேறு இடம் தந்து அல்லது அந்த இடத்தையாவது கையகப்படுத்தி அந்த இடத்திலேயே கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் நிலங்களைப் பொறுத்தவரையில் பல்வேறு இடங்களிலே சென்னையில் இப்படிப்பட்ட பிரச்சினை நிலவி வருகிறது, தனியாருக்குச் சொந்தமான நிலங்களில் அரசு அந்த நிலங்களை ஆக்கிரமிப்பு செய்வதில் சில சட்டப்பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினால் அப்படி அந்த நிலங்களை குடிசை வாழ் மக்களை மாற்றி அமைப்பதற்காக ஆர்ஜிதம் செய்கின்றபொழுது வழக்காடு மன்றங்களிலே பல்வேறு சந்தர்ப்பங்களில் நில உரிமையாளர்கள் சென்று அந்தத் திட்டங்களைப் பாதிக்கின்ற வகையில் பல்வேறு நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. அந்த அடிப்படையில் எங்கெங்கு எல்லாம் அது சாத்தியக்கூறாக இருக்கிறதோ அதில் எல்லாம் நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி,

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, சென்னையில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக எவ்வளவுதான் குடிசைகளை மாற்றி பல அடுக்கு மாடிக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்து வந்தாலும் குடிசைகள் திடீர் திடீர் என்று முளைத்துக் கொண்டே இருப்பதை நாம் பல ஆண்டுகளாகக் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவைகள் மாதம் தோறும், நாள் தோறும் தீப்பற்றி எரிவதையும் பார்க்கின்றோம். சென்னை நகருக்குள் குடிசைகள் மாநகராட்சியின் அனுமதி இல்லாமல் அமைக்கப்படுமேயானாலும் அந்தக் குடிசைகள் தீப்பற்றாத குடிசைகளாக ஓலைக் குடில்கள், தென்னங்குடில்கள் மூலம் குடிசைகள் அமைப்பதற்குத் தடை விதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

(மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை)

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிசைகள் சென்னை நகரிலே பெருகுவது என்று சொல்வது இது ஏதோ ஓரிரு நாளிலே உருவாக்கப்பட்டது அல்ல; ஆண்டாண்டு காலம் அது தொடர்ந்து இருந்து வருகின்ற பிரச்சினை, சென்னை நகரத்தினுடைய தொழில் வளத்தையும் தன்மையையும் பொறுத்து, ஏழை எளிய மக்கள் வேலை தேடி இந்த நகரத்திற்கு வருகின்றவர்கள் ஆங்காங்கே கிடைக்கின்ற இடத்திலே குடிசை போடுகின்ற நிலைமை ஆண்டாண்டுக் காலமாகத் தொடர்ந்து நிலவி வருகின்றது, அதைக் கணக்கிலே எடுத்துத்தான் வாரியத்தின் வாயிலாகக் கண்காணிப்புக் குழுக்கள் எல்லாம் அமைக்கப்பட்டு இப்படிக் குடிசைகள் பெருகுவதைத் தடுப்பதற்காக அரசு பல்வேறு திட்டங்களை உருவாக்கி அதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது, அந்த அடிப்படையில் இது ஏதோ ஒரு ஐசொலேட்டட் பிராப்ளம் என்று எடுத்துக் கொள்ளாமல் தொடர்ந்து நிலவி வருகின்ற பிரச்சினை என்ற நிலையில் அரசு பல வேறு கட்ட நடவடிக்கைகளை எடுத்து. தற்சமயம் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்றதற்குப் பிறகு இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றியமைப்பதற்காக குடிசைமாற்று வாரியத்தினுடைய பணிகள் தீவிரப் படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 559, செல்வி கோ. மல்லிகா இருக்கையில் இல்லை.

[1993 ஏப்ரல் 30

வினா எண் 560, திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்,

560—

சத்துணவுக் கூடங்களில் முதியோருக்கு மூன்று வேளையும் உணவளித்தல்,

* 19123—திரு. வி. ரவிச்சந்திரன் :
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுக் கூடங்களில் முதியோர்க்கு மூன்று வேளையும் உணவு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போதிலிருந்து செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி சமூகநலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மூன்று வேளையும் உணவு அளிக்க இயலாது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ' இல்லை ' என்று கூறிவிட்டார்கள்,

" காக்கை, குருவி எங்கள் சாதி— நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை ;
நோக்க நோக்கக் களியாட்டம் "

காணும் வகையில் என அறிவித்து நிற்போரை சுண்டு விரல் அசைவினால் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் சத்துணவுக் கூடங்களில் முதியோருக்கு மூன்று வேளையும் வயிறறுக்குச் சோறிட வேண்டும்,

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம் ;

மங்காத விளக்கொளியாக விளங்கும் எங்கள் மாதரசியே. பசிப்பிணியை அகற்றும் மருத்துவம் மற்ற அணிகளுக்கு அணியான மணிமேகலையே தாயே, ஏழை முதியோருக்கு மூன்று வேளையும் சோறிட அரசு ஆவன செய்யுமா என்ற அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.